# மாகாணக் கல்வித் திணைக்களம்

# வடமாகாணம்

## பயிற்சிப் பரீட்சை - மார்ச் 2017

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

## வினாத்தாள் - I

**3**

45 நிமிடம்

சுட்டெண் ........................................................

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுங்கள்.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன.
- 1 - 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.


## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்




| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |


| | ஒப்பம் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதெனச் சான்றுப் படுத்துகின்றேன். | V/II/T/ |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரிசீலனையின் மதிப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன். | V/II/T/ |
| கணித பரீட்சகர்<br>மதிப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன் | V/II/T/EMF/ |
| பிரதம பரீட்சகர்<br>மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதெனத் தெரிவிக்கின்றேன் | V/II/T/CH/ |

❖ **ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

❖ **1 ஆம் , 2 ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவைப் பூர்த்தி செய்வதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.**

*01.* 




*1.*  *2.*  *3.* 


*02.* 




*1.*  *2.*  *3.* 

❖ **கோலத்தை இனங்கண்டு வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

*03.*  ________ , ________

*1.*  *2.*  *3.* 

*04.*  ________

*1.*  *2.*  *3.* 

*05.* எல்லா மாணவர்களுக்கும் பொதுவான பண்பு


1. தினமும் வீட்டுப்பாடம் தொடர்பான வேலைகளில் ஈடுபடுதல்.
2. அதிக எண்ணிக்கையான நண்பர்களைக் கொண்டிருத்தல்.
3. ஏதேனும் ஒரு வகுப்பில் கல்வி கற்றல்.

*06.* தேன்கூடு ஒன்றில் உள்ள தேனீக்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நிமிடத்திற்கும் இரட்டிப்பாக மாறுகின்றது. தேன் கூட்டின் $\frac{1}{4}$ பகுதி தேனீக்கள் மு. ப 8.57ற்கு காணப்பட்டது. தேன்கூடு தேனீக்களால் முழுமையாக நிரம்பியிருந்த நேரம்

1. மு.ப 8.58   2. மு. ப 9.00   3. மு.ப 8.59

❖ **07, 08 ஆகிய வினாக்களின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

*07.*





*1. 32*   *2. 36*   *3. 38*

08.

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 1 | 6 |
| 4 | A..... | 3 | 24 |
| 2 | 3 | B..... | 30 |
| 16 | 18 | 15 | |

A, B ஆகியவற்றுக்குரிய இலக்கங்கள் முறையே

1. 3, 2 2. 2, 5 3. 5, 3

09. 

இக் குறியீட்டினால் குறித்துக் காட்டக் கூடிய மிகப் பொருத்தமான சொல் எது?

1. வதனம் 2. கரகம் 3. வடிவம்


✣ **பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள சொற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய சொற்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.**

10. **ஊன்** உணவு உடல் நலத்திற்கு **கேடு** விளைவிக்கும்.

1. உணவு, இன்பம் 2. இறைச்சி, தீங்கு 3. உணவு, தீங்கு

11. சுரேன் **தடாகத்தில்** உள்ள **கமலப்** பூக்களைப் பறித்தான்.

1. வாவியில், மலர்களைப் 2. பொய்கையில், தாமரைப் 3. ஆற்றில், புஸ்பம்

12. 

இவ்வுருவில் ஆக்கக் கூடிய சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1. 13 2. 14 3. 17

13. இரு பகுதிகளிலும் சமமாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க.


1. A 5 பட்து 25 மாது – A 5 படது 52 மாது
2. B 4 கடது 571 மன் – B 4 கடது 517 மன்
3. 33 லகட D41 படது – 33 லகட D41 படது

14. மிகச் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

1. கொதித்தாறிய நீரைப் பறுகுவோம்.
2. கொதித்தாறிய நீரைப் பருகுவோம்.
3. கொதித்தாறிய நீரப் பருகுவோம்

15. மன்னார் நகரமும் வியாங்கொட நகரமும் பருமனில் சமனானவை. வியாங்கொட நகரம் மட்டக்களப்பு நகரத்தை விடப் பெரியது. வியாங்கொட நகரம் வவுனியா நகரத்தை விடச் சிறிது. பருமனில் சிறிய நகரம் எது?

1. மன்னார் 2. வியாங்கொட 3. மட்டக்களப்பு

16. 


இச் செவ்வக அட்டையில் இருந்து ஒரு பக்க நீளம் 3cm கொண்ட எத்தனை சதுரக் கட்டங்களை வெட்டி எடுக்க முடியும்?


1. 12 2. 08 3. 10

17. ஐம்பது நிமிடங்களுக்கு ஒரு தடவை ஒலிக்கும் ஒரு கடிகாரம் உள்ளது. அது மூன்றாவது தடவை மு. ப 9.10 இற்கு ஒலித்தது எனின், முதல் தடவை ஒலித்த நேரம் யாது?

1. மு.ப 8.20 2. மு. ப 7.30 3. மு. ப 7.40

18. “கிடைக்கும் சந்தர்ப்பத்தைத் தவற விடக்கூடாது” எனும் கருத்தைத் தரும் பழமொழி யாது?

1. சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்.
2. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
3. எறும்பூரக் கற்குழியும்.

19. 

உருவில் காணப்படும் திண்மப் பொருளை முறிந்த கோட்டின் வழியே வெட்டும் போது கிடைக்கும் முகத்தின் வடிவம் யாது?

1. சதுரம் 2. செவ்வகம் 3. முக்கோணம்

20. அருண் காலையில் பாடசாலைக்கு நடந்து செல்லும் போது அவனது நிழல் அவனுக்கு முன்னால் விழுந்தது எனின், அவன் செல்லும் திசை யாது?

1. மேற்கு 2. கிழக்கு 3. வடக்கு

❖ R.ACD.MN ஐப் பெறுமதியாக ரூ. 843.50 எனக் காட்டலாம் எனின்,

21. ரூ. 458.45 ஐ எவ்வாறு காட்டலாம்?

1. R.DAM.NA 2. R.CMA.CM 3. R.CAM.CM

22. R.ANMD.CA இனால் காட்டப்படுவது யாது?

1. ரூ 843.80 2. ரூ. 8054.48 3. ரூ. 8053.48

✧ **23 ஆம் , 24 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழுள்ள அட்டவணையைப் பயன்படுத்துக.**

| தானியங்கள் | பழங்கள் | B ………… |
|---|---|---|
| குரக்கன்<br>உழுந்து<br>A ……………… | வாழைப்பழம்<br>தோடம்பழம்<br>மாம்பழம் | பாகற்காய்<br>வெண்டிக்காய்<br>கத்தரிக்காய் |

23. இடைவெளி B இற்குப் பொருத்தமான சொல் எது?

1. கிழங்கு வகை 2. மரக்கறிகள் 3. கீரை வகைகள்


24. இடைவெளி A இற்குப் பொருத்தமான சொல் எது?

1. வெங்காயம் 2. பயறு 3. அன்னாசிப்பழம்

25. பிழையாக எழுதப்பட்டுள்ள கோவையைத் தெரிவு செய்க.

1. $8 \times 8 - 8 = 60 - 4$ 2. $3 \times 12 + 4 = 8 \quad 5$ 3. $7 \times 6 + 6 = 10 \quad 5$


26. உருவைப் பார்த்து சரியான விடையைத் தெரிவு செய்க.



முழு உருவின் பரப்பளவு நிழற்றப்பட்டுள்ள உருவின் பரப்பளவின் எத்தனை மடங்கு ஆகும்?

1. 8 மடங்கு 2. 4 மடங்கு 3. 2 மடங்கு

27.




சதுரமுகியொன்று மூன்று பக்கங்களால் பார்க்கும் போது தோன்றும் விதத்தை உருக்கள் காட்டுகின்றன. அதன்படி R முகத்திற்கு எதிர்ப்பக்கத்திலுள்ள முகம் எது?

1. A 2. K 3. B

| |
|---|
| **தனுசன் ஆண்பிள்ளை ஆவான். தனுசனின் அக்காவிற்கு இரண்டு ஆண் சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் உள்ளனர்.** |

28. தனுசனுக்கு எத்தனை சகோதரர் உள்ளனர்?

1. 4 2. 1 3. 3

29. தனுசனுக்கு எத்தனை சகோதரிகள் உள்ளனர்?


1. 4 2. 2 3. 3

30. சொற்கோலத்தை அவதானித்து இடைவெளியில் வரவேண்டிய சொல்லைத் தெரிவு செய்க.

பதவி → வித்து → துறவி → ..................................

1. விறகு 2. படகு 3. திகதி

✣ **தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 31 ஆம் , 32 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**




31. அன்னாசிப் பழங்கள் 3 இனதும் மாம்பழங்கள் 5 இனதும் விலை யாது?

1. ரூபாய் 80.00 2. ரூபாய் 100.00 3. ரூபாய் 90.00

32. அன்னாசிப்பழம் 1 இனதும் மாம்பழம் 1 இனதும் விலை யாது?

1. ரூபாய் 22.00 2. ரூபாய் 24.00 3. ரூபாய் 20.00

✧ **பின்வரும் கவிதையை வாசித்து 33 ஆம் , 34 ஆம் ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**

மண்ணைக் .........✡.......... கண்டனன்.
மக்கள் தாகம் தீர்த்திடும்.
தண்ணீர் வைக்கும் பானையாய்
மண்ணை நொடியில் .........❀.........

33. ✡ என்ற குறியீடு உள்ள இடத்துக்குப் பொருத்தமான சொல் எது?
1. சிற்பி 2. ஓவியன் 3. குயவன்

34. ❀ என்ற குறியீடு உள்ள இடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.
1. போற்றினர் 2. தூற்றினர் 3. மாற்றினன்

35. வகுப்பிலுள்ள மாணவர்களில் ஒவ்வொரு 5 பேருக்கும் 2 பேர் பரீட்சை எழுதவில்லை என அறியப்பட்டது. அதன்படி பரீட்சை எழுதியவர்கள் 15 பேர் எனில் அவ் வகுப்பிலுள்ள மொத்த மாணவர்கள் எத்தனை பேர்?
1. 30 2. 25 3. 45

36. மீனாவினதும் ராணியினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 48 வருடங்களாகும். ராணி மீனாவின் வயதிலும் 8 வருடங்கள் இளையவள் எனின், மீனாவின் வயது எத்தனை வருடங்களாகும்?
1. 20 வருடங்கள் 2. 28 வருடங்கள் 3. 24 வருடங்கள்

37. 8m நீளமான கயிற்றுத் துண்டொன்று இரு சமபகுதிகளாக வெட்டப்பட்டு மீண்டும் ஒரு பகுதி இரு சம துண்டுகளாக வெட்டப்பட்டது எனின், சிறிய துண்டொன்றின் நீளம் யாது?
1. 400 cm 2. 200 cm 3. 100 cm

38. 12 மனிதர்கள் 6 நாட்களில் செய்யும் வேலையொன்றை 4 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?
1. 18 நாட்களில் 2. 14 நாட்களில் 3. 20 நாட்களில்

39. வீதி ஒன்றில் 4m இடைவெளியில் நேரான பாதையில் 15 கொடிக்கம்பங்கள் நடப்பட்டுள்ளன. முதலாவது கம்பத்திற்கும் பதினைந்தாவது கம்பத்திற்கும் இடையிலான தூரம் யாது?
1. 56m 2. 60m 3. 64m

40. பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரில் உள்ள கூடுகளை நிரப்புக.

இடமிருந்து வலம் → 1 – கமுகு தருவது
3 – வேகமாக வீசும் காற்று

மேலிருந்து கீழ் → 1 – ஊர்ந்து செல்லும் பிராணி
2 – இனிமையான குரல் உடைய பறவை.

| | | |
|---|---|---|
| 1. | | 2. |
| | ▓ | |
| 3. | | |

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
## பயிற்சிப் பரீட்சை 03 இன் விடைகள்

தரம் – 05 **3** வினாத்தாள் – I

1. 3
2. 1
3. 3
4. 2
5. 3
6. 3
7. 2
8. 2
9. 1
10. 2
11. 2
12. 3
13. 3
14. 2
15. 3
16. 2
17. 2
18. 2
19. 2
20. 1
21. 2
22. 3
23. 2
24. 2
25. 3
26. 2
27. 2
28. 2
29. 3
30. 1
31. 3
32. 1
33. 3
34. 3
35. 2
36. 2
37. 2
38. 1
39. 1
40.

| | | |
|---|---|---|
| 1. பா | க் | 2. கு |
| ம் | | யி |
| 3. பு | ய | ல் |